**செய்தி வெளியீடு எண்: 461** **நாள்: 16.07.2018**

## செய்தி வெளியீடு

தமிழக அரசின் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறையின் கீழ் உள்ள அண்ணா மேலாண்மை நிலைய பயிற்சி மையத்தின் பகுதி பயிற்சி நிறுவனமாகிய அகில இந்திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையம், சென்னையில் இராஜா அண்ணாமலைபுரத்தில் இயங்கி வருகிறது. தமிழக அரசின் தலையாய நோக்கமே தமிழக மாணவர்கள் அதிகம் பேர் குடிமைப்பணியில் சேர வேண்டும் என்பதே ஆகும். இங்கு சேரும் மாணவர்களுக்கு UPSC பாடத்தின்படி சிறந்த பேராசிரியர்களை கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், இங்கு பயிற்சி அளிக்கப்படும் மாணவர்களுக்கு அரசால் தங்கும் அறையும், தரமான உணவும் இலவசமாக வழங்கப்படுகிறது. தற்போது, UPSC (Civil Services) முதல்நிலை தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதால் முதன்மை தேர்க்கான பயிற்சிகள் வரும் ஆகஸ்ட் முதல் வாரத்தில் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன. இப்பயிற்சி மையத்தில் பயிற்சியில் சேர www.civilservicecoaching.com என்ற இணையதளத்தில் உள்ள விண்ணப்பத்தை 18.07.2018 காலை 10,00 மணி முதல் பதிவேற்றம் செய்து இணையதளம் மூலமாக பூர்த்தி செய்து 27.07.2018 மாலை 5.45 க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**